சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 42/2020

**PW 1 சசிகலா** **19.09.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தில் யார் இறந்தது என கேட்டால் என்னுடைய தகப்பனார் சின்னத்தம்பி என்கிற முருகானந்தம் இறந்துவிட்டார். எனது தகப்பனார் மீது மோதிய வாகனத்தின் உரிமையாளர் பெயர் என்னவென்று கேட்டால் மதன் குமார். அதற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும், மதன் குமார் தான் வாகனத்தின் உரிமையாளர் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவிலலை என்றால் சரியல்ல. வாகனத்தின் உரிமையாளர் காப்பிட்டாளர் யார் என்ற விவரத்தை பொருத்து ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரிதான். எனது தகப்பனார் இறந்து இடம் டாஸ்மாக் முன்பு என்று சொன்னால் சரியல்ல டாஸ்மாக்ல் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 மீட்டர் இருக்கும். எனது தகப்பனாருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றும் அதன் காரணமாக டாஸ்மாக் முன்பு சாலையில் படுத்து உறங்கிவிட்டார் என்றும் அப்போது ஏதோ ஒரு வாகனம் விபத்து ஏற்படுத்தி விட்டது என்றும் இவ்வழக்கிகல் கண்ட எதிர்மனுதாரருக்கும் விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. எனது தகப்பனார் விபத்து சமயத்தில் மது அருந்தவில்லை, ஆனால் அவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு. இவ்வழக்கில் கண்ட எதிர்மனுதாரருக்கும் விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி